IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 75/2017

Deposition of Witness : PW 1

Name : பெருமாள் (வயது –49 )

Father's Name /W/o : த/பெ முனியன்

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : நெல்வாய்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 10.06.2025.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் திருமால்பூர் நெல்லை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எத்தனை வருடமாக வசித்து வருகிறேன் என்றால் 10 வருடமாக வசித்து வருகிறேன். தாவா சொத்து எந்த இடத்தில் உள்ளது என்றால் நெலவாய் கிராமத்தில் உள்ளது. நான் நெலவாய் கிராமத்தில் இருந்து வருவதற்கு இந்நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாத்தா எழுதி கொடுத்த தானப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். ஆதார் அட்டை, ரேஷன் அட்டை மற்றும் தேர்தல் அட்டை தாக்கல் செய்துள்ளேன்.

2. என்னிடம் தாவா அட்டவணையில் மேற்படி ஆவணங்கள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி ஆவணங்கள் நெல்வாய் கிராம விலாசத்தில் வருகிறது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அதனை தாக்கல் செய்தால் உண்மை வெளிவரும்

என்றாலும் சரியல்ல.

3.என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ – 1 என் தாத்தா வாங்கிய கிரையப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 2 அட்டவணை சொத்து வாங்கியது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி 2 அட்டவணை சொத்திற்கான செக்பந்தி என் தாவாவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தாவாவில் நான் அந்த வரைபடத்தை போடவில்லை. அதனால் தாவாவில் வரைபடத்தில் தெரிவித்துள்ள விபரங்கள் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள செக்பந்தி தெரிவித்துள்ளேன்.

4. பிரதிவாதிகளுக்கு எவ்வளவு அளவுள்ள சொத்துக்கள் என்று நான் ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–2 இல் பூபதி மற்றும் அர்ஜுனன் ரெட்டிக்கு எவ்வளவு பாகம் என்று குறிப்பிட்டுள்ளது எனக்கு படிக்க தெரியவில்லை. அர்ஜுனன் ரெட்டிக்கு 40 அடி ஒதுக்கப்பட்டுள்ளது .

5. என்னிடம் படித்துக் காட்டப்படும் வா.சா.ஆ – 2 இல் எனக்கு மட்டும் தான் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது அர்ஜுனன் ரெட்டிக்கு 40 அடி ஒதுக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்து மொத்த அளவு எவ்வளவு என்பதற்கு பட்டா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை பத்திரம் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் செயலுறுத்து கட்டளை பரிகாரம் மட்டும் தான் கோரியுள்ளேன் என்றாலும் விளப்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் நான் என் இடத்தில் கட்டிடங்கள் கட்டக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. பிரதிவாதிகள் என் பெயரில் காவல்நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். நான் பிரதிவாதிகள் கட்டிடம் கட்டுவதற்கு தடை செய்தேன் என்பதற்கு என் மீது புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். என் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதிகள்

எத்தனை அடியில் கட்டடிடங்கள் கட்டியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. இதற்கு முன்பு சொல்லவில்லை என்று சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல.

7. பிரதிவாதிகள் கட்டிடங்கள் அப்புறப்படுத்த வேண்டும் என்று நான் வழக்கு தாக்கல் என்றேன் சரிதான். பிரதிவாதிகளுக்கு சொந்தமான இடத்தில் தான் கட்டிடங்கள் கட்டுகிறார்கள் நான் அவர்கள் மீது உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. பூபாலனுக்கு உரிமையான அளவு எவ்வளவு என்றால் 40 அடி எந்த பக்கம் என்று எனக்கு ஞாபகமில்லை. பூபாலனுக்கு 40 அடி மட்டுமே சொந்தமானது என்பதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன்.

8. நான் பொதுவழியை மறைத்து தான் வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் பொது வழி பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை. தளத்தில் பொது வழி இருக்கிறதா இல்லையா என்றால் இருக்கிறது. பயன்பாட்டில் இருக்கும் பொது வழியை காட்டாமல் நான் வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் பத்திரத்தில் இருப்பது மட்டும்தான் நான் என் தாவாவில் குறிப்பிட்டுள்ளேன். வடக்கு தெற்கு 54 அடியில் தான் பிரதிவாதிகள் சிமெண்ட் கூரை வீடு மற்றும் அதற்கு பின்பும் தளம் போட்ட வீடு கட்டுவதற்காக கட்டிடங்கள் கட்டிவருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் கற்பனையாக அளவு கொடுத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகள் மறைத்து வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நானும் என் தந்தையும் தாவா சொத்தில் குடியுருக்கவில்லை என்றால் சரியயில்லை நாங்கள் அங்குதான் குடியிருந்தோம்.

9. தாவா சொத்தில் இருந்த கூரைவீடு எரிந்து விட்டது என்றால் எனக்கு 8 வயது இருக்கும்போது எரிந்து விட்டது. அந்த கூரை வீடு எரிந்த பிறகு என் தந்தையார் வழக்கு சொத்துக்கு 3 வீடு தள்ளி எங்களுக்கு சொந்தமான மனையில் கூரைவீடு கட்டி வாழ்ந்து வந்தார். எனவே பிரதிவாதிகள் நிரந்தர

உறுத்து கட்டளை கோர முடியாது என்றாலும் தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.